


# வேரும் தளிரும்

யாதும் ஊரே யாவரும் கேளிர்




விண்ணெட்டும் பாரம்பரியம் விண்ணெட்டிய விஞ்ஞானம்

பிலவ ஆண்டு, கார்த்திகை 01, கலியுகம் 5119 வளர்பிறை திரயோதசி (17-11-2021), அசுவினி ,


## காலத்தின் நீச்சலிலும் வெற்றி காணும் குற்றாலம்

( https://en.wikipedia.org/wiki/Kutraleeswaran )

அந்த பன்னிரெண்டு வயது சிறுவன் பாக் ஜலசந்தியைக் நீந்திக் கடக்கவேண்டும் என்ற முனைப்போடு நடுநிசியில் இலங்கையிலிருந்து இந்திய கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தான். ஏன் நடுநிசி? கடலின் அடி நீரோட்டம் அந்த வேளையில் உதவி செய்யும் என்பதை அறிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம் அது. முப்பது கிமீ தூரத்தை கடக்க கணக்கிடப்பட்டிருந்த நேரம் சுமார் 11 மணி நேரம். ஆனால் எடுத்துக்கொண்டதோ பதினாறு மணி நேரம்., ஏனிந்த வித்தியாசம் ?

உடன் வந்த வழிகாட்டிப் படகில் இருந்த திசைக்காட்டி பழுதாகி தவறான திசையில் வடக்கு பக்கத்தை காட்டியதால் சுமார் மூன்று மணி நேரம் எதிர் திசையில் நீந்திக் கொண்டிருந்தான் அச்சிறுவன். படகில் இருந்த மீனவர் ஒருவர் நட்சத்திரங்களின் நிலையை வைத்து தவறான போக்கை சுட்டிக் காட்டிய பின்பே சரியான திசைக்குத் திரும்பினர். பாக் ஜலசந்தியை மிக இளவயதில் நீந்திக் கடந்த பெருமையை உடையவன் தமிழகச் சிறுவன் திரு குற்றாலீஸ்வரன்.



{இது நடந்தது ஏப்ரல் 1994-ல். சுமார் 25 ஆண்டுகளுக்கு பிறகு இந்த சாதனையை முறியடித்தது தேனீ மாவட்டத்தை சேர்ந்த இன்னொரு தமிழ் சிறுவன், ஜெய் ஜஸ்வந்த் என்கிற பத்து வயது சிறுவன். அவன் பத்தரை மணி நேரத்தில் பாக் ஜலசந்தியை மார்ச் 2019-ல் நீந்தி சாதனை புரிந்துள்ளான் }

இன்று, குற்றாலீஸ்வரன் ஒரு முற்போக்கு இளைஞர். அமெரிக்க பல்கலைக் கழகங்களில் உயர்படிப்பு முடித்த ஒரு பொறியியல் வல்லுனர். ஒரு பெறும் நிறுவனத்தில் நிதித் துறை ஆலோசகர். இந்திய இளம் தலைமுறை சர்வதேச போட்டிகளில் சிறப்பான இடத்தை எட்ட வேண்டும் என்பதில் மிக்க ஆர்வம் உள்ளவர். அதற்கான ஒரு அறக்கட்டளையை நிறுவி இந்தியா முழுவதிலுமான தனித்திறமை வாய்ந்த சிறுவர் சிறுமியரை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்வதும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் தேவைப்பட்டால் பொருளுதவி செய்வதும் அவர்களுடைய முதல் குறிக்கோளாகும். இரண்டாவதாக விளையாட்டுத் துறையை நம்பி ஒரு சில மைல்-கற்களை எட்டி பின்னர் ஓய்வு பெற்று தற்போது முறையான வாழ்வாதாரமற்ற மூத்த விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்வது.



அந்த அறக்கட்டளையின் பெயர் **நண்பன். ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை வைத்து ஆகஸ்ட் 30 தேதி 2021 இது சென்னையில் துவக்கப்பட்டது,** முதல் கட்டமாக தமிழகத்தின் எட்டு மாவட்டங்களில் மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கான தேர்வு நடைபெறுகிறது. அவர்கள் விளையாட்டில் எந்தத் துறையிலும் ஆர்வமும் திறமையும் உடையவர்களாக இருக்கலாம். ( https://nanbansportsfoundation.org/our-beneficiaries/ )

திரு குற்றாலீஸ்வரனின் நாட்டுப்பற்று அவருடைய 13 வயதிலேயே வெளிப்பட்டது. அவர் இத்தாலி நாட்டு மெஸ்ஸினா சந்தியில் நீந்திய திறமை கண்டு அவருக்கு இத்தாலிய குடியுரிமை வழங்கி அங்கேயே சிறப்பான பயிற்சிகள் தர அந்த நாட்டினர் முன் வந்த போது அதை மறுத்து பெருமையெல்லாம் தன் தாய் நாட்டிற்கே சேர வேண்டும் என்ற எண்ணம் கொண்டு தாயகம் திரும்பினார். தன்னுடைய பதினேழாம் வயது வரையில் பல்வேறு சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர். **அந்த இள வயதிலேயே அவருக்கு அர்ஜுனா விருது வழங்கி இந்திய அரசு அவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது**. தவிர கின்னஸ் சாதனைகள் புத்தகத்திலும் ‘ஒரே வருடத்தில் (1994) உலகின் ஆறு ஜலசந்திகளை நீந்தியவர்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆனால் கல்லூரி பருவம் எட்டியதும் தன் போக்கை மாற்றிக் கொண்டு முழு கவனத்தையும் பொறியியல் துறையில் செலுத்தி சிறந்த முறையில் தேர்ச்சி பெற்று அமெரிக்க நாட்டில் மேற்படிப்பும் முடித்து நல்ல நிலையை அடைந்துள்ளார். இதற்கு தூண்டுகோலாக இருந்தது விளையாட்டுத் துறையிலிருந்தது ஓய்வு பெற்றபின்,-பொருளாதார கண்ணோட்டத்தில்-எழப்போகும் ஒரு நிச்சயமற்ற எதிர்காலமே என்பதை அவர் முழுதும் உணர்ந்ததே காரணம். அவர் அறக்கட்டளையை ஆரம்பித்ததன் நோக்கம் அத்தகைய ஒரு நம்பகமற்ற ஒரு தன்மையை நம் நாட்டில் மாற்றினால் கண்டிப்பாக பல நூறு வீரர்களை எல்லாத் துறைகளிலும் உருவாக்க முடியும் என்னும் சீரிய சிந்தனையே ஆகும்.. இப்படி தன்னுடைய திறமையை பின்னுக்குத் தள்ளி வரப்போகும் தலைமுறையினருக்கு வழிகாட்டியாக வாழ்வின் இலக்கை மாற்றிக் கொள்பவர்களும் சமுதாயத்திற்கு பெரும் சேவை செய்பவர்களே ஆவார்கள்.

## *தெரிந்த ஊர், தெரியாத விஷயம் : திருவிசை நல்லூர் -கிணற்றில் கங்கை*

நமது பாரம்பரியத்தில் தல விசேஷங்கள் அந்தந்த தலங்களில் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன, அதற்கு பின்னணியாக ஒரு வரலாறு இருக்கும்.காரைக்காலில் மாங்கனித் திருவிழா பற்றி ஏற்கனவே கண்டிருக்கிறோம். (அக் 2018) அது போல திருவிசை நல்லூர் என்ற ஊரில் ஸ்ரீதர அய்யாவாள் என்கிற மகான் வசித்த இல்லத்துக் கிணற்றில் கங்கையை எழுந்தருளச் செய்து ஆராதனை செய்யும் விழா ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாத அமாவாசையன்று கொண்டாடப்படுகிறது. இதற்கான வரலாறு மிகவும் அதிசயமானது. முழு விளக்கப் படம் யூட்யூப் காணொளியில் காணலாம் (https://www.youtube.com/watch?v=drei6oAbKqo). அன்று நூற்றுக் கணக்கானோர் அக்கிணற்றிலிருந்து நீர் இறைத்து அதை தம் மேல் கொட்டிக் கொண்டு கங்கையில் நீராடிய புண்ணியம் பெறுகின்றனர்.






கங்கை எழுந்தருளிய கிணற்றில் பிரார்த்தனை :
ஸ்ரீதர ஐயாவாள் அருளிய கங்காஷ்டக ஸ்தோத்ரம்

கடைசிவரியான "த்வாம் கூப ஸம்பவாம்" என்பது நீ இந்த கிணற்றில் எழுந்தருள வேண்டும்" என்பதான பிரார்த்தனை ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வரும். அப்படியே கங்கையும் வெள்ளமாக பெருகி ஓடினாள் என்பது பலரும் கண்ட அதிசயம்.

ஒரு கார்த்திகை அமாவாசையன்று பித்ரு சிராத்தம் செய்ய காத்திருந்தார் ஸ்ரீதர அய்யாவாள். பிராமண போஜனத்திற்கு முன்பே பசியோடு வந்த ஒருவனுக்கு அன்னமிட்டதால் அவர் பூஜையை செய்யும் தகுதியை இழந்ததாகவும் மீண்டும் தகுதியைப் பெற கங்கையில் நீராடி வரவேண்டும் என்று கட்டுப்பாடு விதித்து அந்தண சமூகத்தினர் அவரை பகிஷ்காரம் செய்தனர். அப்போது அவர் தான் நித்தியம் வழிபடும் சிவபெருமானை மனதில் பிரார்த்தித்து எட்டுப் பாடல்களில் கங்காஷ்டகம் -பாடி கங்கையை துதித்தார். அப்படி செய்ததுமே அவருடைய வீட்டின் கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்து பொங்கி வீதியெங்கும் பெருக ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற பிராமணர்கள் அய்யாவாளின் தவப் பெருமையை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கோரினர்.
திருவிசைநல்லூர் கும்பகோணம் -மயிலாடுதுறை சாலையில் எட்டாவது கி.மீ தூரத்தில் உள்ளது.

## *வாழ்க்கை நெறி- தமிழ் கருவூலம் : பழமொழிக் கதை - மூடருக்கு அறிவுரை கேடு தரும்*

*(பழமொழிக் கதைகள் மூலம் சிறுவர்களுக்கு தமிழின் சுவையை சொல்லும் ஒரு முயற்சி இது )*

ஒரு காட்டில் ஒரு பெரிய மரத்தில் இரண்டு தூக்கணாங் குருவிகள் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தன.



ஒரு நாள் பெரும் மழை பெய்தது. அந்த மழையில் நனைந்து குளிரினால் ' பற்கள். கிட்டிப் போய், உடல் நடுநடுங்கியபடி ஒரு குரங்கு வந்தது. அது அந்த ஆலமரத்தினடியில் வந்து மழைக்கு ஒதுங்கி நின்றது. அதைப் பார்த்து தூக்கணாங் குருவிகளில் ஒன்று மிகவும் இரக்கப்பட்டது.

குரங்கை நோக்கி, உனக்குக் கை கால் இருக்கும் போது நீ ஒரு கூட்டைக் கட்டிக் கொண்டு இருக்கக் கூடாதா? ஏன் இப்படி மழையில் நனைந்து குளிரில் நடுங்க வேண்டும்?' என்று கேட்டது.
இதைக் குரங்கு தவறாக எடுத்துக் கொண்டு விட்டது. அந்தக் குருவி, தன்னைக் கையாலாகாதவன் என்று. பழிப்பதாக அது நினைத்துக் கொண்டது. அதனால் ஆத்திரம் அடைந்து, 'ஏ ஊசி மூஞ்சி மூடா ! நீ எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாயா? எனக்கா கூடு கட்டத் தெரியாது. இருக்கட்டும். இதோ உன் கூட்டை என்ன செய்கிறேன் பார்!" என்று சொல்லிக் கொண்டே மரத்தில் ஏறிக் குருவிக் கூடுகளைச் சின்னாபின்னமாகப் பிய்த்து எறிந்தது.
இரக்கத்தால் நல்லுரை சொன்ன குருவிகளும் இப்போது மழையில் நனைந்து குளிரால் நடுங்கின.

**மூடனுக்கு சொல்லும் புத்தி கேட்டில் முடியும்.** இது ஒரு பஞ்சதந்திர கதை ( நன்றி விக்கி மூலம் )

*Visit : https://verumthalirum.blogspot.com ( for earlier issues ) Feed back : verumthalirum@gmail.com*